பக்கங்கள்; நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 பங்குனி 08 வியாழக்கிழமை (21-03-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 116

# அராலித்துறையில் அதிரடி!

# எட்டு இராணுவத்தினர் பலி!!

## மினி முகாம் வீழ்ந்தது

சாவகச்சேரி, மார்ச் 21

ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பில் உள்ள வலிகாமத்தில் அராலித்துறைப் பகுதியில் இராணுவ மினி முகாம் ஒன்றின் மீது நேற்று அதிகாலை 1.45 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் எட்டுக்கும் அதிகமான இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; முகாமிலிருந்த ஏனைய சிப்பாய்கள் காயங்களுடன் தப்பியோடினர்.

மினி முகாம் மீதும் அதிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் இருந்த இராணுவக் காவலரண் மீதும் அதிரடித் தாக்குதலை நடத்திய புலிகள் பத்து நிமிடச் சமரின் பின்னர் மினி முகாமை தங்களது பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர்.

சமர் ஒரு மணி நேரம் மினி முகாமைக் கட்டுப்பாட்டில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 3 வேங்கைகள் களப்பலி

அராலித்துறையில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலின்போது மூன்று வேங்கைகள் வீரச்சாவடைந்தனர். அவர்களின் விவரம் வருமாறு:-

★ மேஜர் வளவன் அல்லது வேணு (இம்மானுவேல் ரஞ்சித் ஜதுர்ஸன் — வட்டக்கண்டல், முருங்கன், மன்னார்)

★ லெப்டினன்ட் செவ்வேள் (இராசையா சுரேந்திரன் — இரணைமடுச் சந்தி, கிளிநொச்சி)

★ பெண் போராளி லெப்டினன்ட் றெபேக்கா அல்லது பூங்கொடி (லிங்கறெட்ணம் எனித்தா ஏஞ்சலின்— முத்தையன்கட்டு). (உ-7)

## புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்கள்

அராலித் துறையில் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களின் விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ 60 எம். எம். மோட்டார் | — | 01 |
| ★ 60 எம். எம். வைபோட் | — | 01 |
| ★ 60 எம். எம். பேஸ் பிளேட் | — | 01 |
| ★ 60 எம். எம். பூஸ்ரர் | — | 45 |
| ★ 60 எம். எம். ஷெல் | — | 32 |
| ★ 60 எம் எம் ஸ்கோப் | — | 01 |
| ★ ஏ. கே. எல் எம். ஜி. | — | 01 |
| ★ ஏ. கே. றம் மகஸின் | — | 09 |
| ★ ஐ. எம். லிங் | — | 100 |
| ★ லிங்குடன் ரவை | — | 200 |
| ★ ஏ. கே. ரகத் துப்பாக்கி | — | 05 |
| ★ ஏ. கே. மகஸின் | — | 32 |
| ★ ஐ. எம். ரவை | — | 8,407 |
| ★ பைனாக்குலர் | — | 01 |
| ★ ஆர். பி. ஜி. ஷெல் | — | 01 |
| ★ ஆர். பி. ஜி. புறொப்ளர் | — | 02 |
| ★ கொமாண்டோ கிளைமர் | — | 01 |
| ★ வயர் றோல் | — | 02 |
| ★ எக்ஸ் புளோடர் | — | 01 |
| ★ பரா ஷெல் | — | 03 |
| ★ கைக்குண்டு | — | 01 |
| ★ திசைகாட்டி | — | 01 |

## கொழும்பின் பாதுகாப்பு: பொலீஸ்மா அதிபர் விசனம்

கொழும்பு, மார்ச் 21

கொழும்பு மா நகரின் பாதுகாப்புத் தொடர்பாக பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் போதுமானதாக அமையவில்லை என கடந்த வாரம் பொலிஸ் உயர் அதிகாரிகள் மகாநாட்டில் பொலிஸ் மா அதிபர் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதச் சம்பவங்கள் தொடர்பான துப்புக்களையும் தகவல்களையும் வெற்றிகரமாக இராணுவத்தினரே கண்டறிந்து வருகின்றனர் என்றும் அங்கு அவர் தெரிவித்தார் என கொழும்புப் பத்திரிகை ஒன்று குறிப்பிட்டுள்ளது. (உ-10)

## 6 கடற்படைச் சிப்பாய்கள் கடற்புலிகளிடம் சிக்கினர்?

கொழும்பு, மார்ச். 21

மன்னார் பள்ளிமுனைக் கடற் பகுதியில் கடந்த 15ஆம் திகதி கடற்படையினர் மீது கடற்புலிகள் நடத்திய தாக்குதலின் போது கடற்படைப் படகிலிருந்து ஆறு சிப்பாய்கள் கடற்புலிகளால் கைது செய்யப்பட்டிருக்கலாம்.

பாதுகாப்பு வட்டாரங்கள் இவ்வாறு சந்தேகிப்பதாக ''திவயின'' சிங்கள நாளிதழ் தெரிவித்துள்ளது. (உ-10)

## பொருள்களை ஏற்றிவரும் பணியில் மற்றொரு கப்பல்!

கொழும்பு, மார்ச் 21

ப.நோ.கூ. சங்கங்களும், தனியார் வர்த்தகர்களும் பொருள்களை எடுத்து வருவதற்கு கப்பல் வசதி பெறுவதில் எதிர்நோக்கும் சிக்கல்களை அடுத்து மற்றுமொரு கப்பலை சேவையில் ஈடுபடுத்துமாறு யாழ். அரச அதிபர் விடுத்த கோரிக்கையை அடுத்து—

அடுத்த மாதம் முதல் புதிய கப்பல் ஒன்றை சேவையில் ஈடுபடுத்தப் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு இணங்கியிருப்பதாகத் தெரியவருகின்றது.

தற்சமயம் நிவாரணப் பொருள்களை ஏற்றிவரும்

(4ஆம் பக்கம் பார்க்க)

### களுகங்கை ஊடாக வந்து

## ஜாவத்தைசிறையை புலிகள் தாக்கி கைதிகளை மீட்பர்!

### எச்சரிக்கிறார் களுத்துறை எம்.பி.

களுத்துறை, மார்ச் 21

களுத்துறை ஜாவத்தைச் சிறைச்சாலையில் பெரும் எண்ணிக்கையான விடுதலைப் புலிகள் சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும்—

அதனால் அந்தச் சிறைச்சாலையை விடுதலைப் புலிகள் களுகங்கை ஆற்றினூடாக வந்து தாக்கக்கூடும் என்ற அச்சம் இப்பகுதி மக்கள் மத்தியில் நிலவுவதாகவும்—

களுத்துறை மாவட்ட எம்.பி. திலக் கருணாரத்னா தெரிவித்துள்ளார்.

களுத்துறை மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது அவர் இவ்விடயத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## அர்ஜுன ரணதுங்க அரசியலில் குதிப்பார்?

உலகக் கிண்ணத்தை ஸ்ரீலங்கா கிரிக்கெட் அணி சுவீகரிக்கக்கூடிய அளவுக்கு அதனைத் திறமையாக வழிநடத்தி, ஸ்ரீலங்கா மக்களின் அபிமானத்தைப் பெற்றிருக்கும் அணித் தலைவர் அர்ஜுன ரணதுங்கவுக்கு அரசியலில் நுளையும் ஆசை பிறந்திருப்பதாகத் தெரிகின்றது என வெரித்தாஸ் வானொலி குறிப்பிட்டது.

அர்ஜுன ரணதுங்கவின் தந்தையார் றெஜி ரணதுங்க தற்போது சந்திரிகா அரசில் போக்குவரத்து, சுற்றுப்புறச் சூழல், மகளிர் விவகார பிரதியமைச்சராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-ரி)

## ரூபா நோட்டு வதந்தியில் எவ்வித உண்மையுமில்லை

### இலங்கை வங்கி அதிகாரி விளக்கம்

ஆயிரம் ரூபா, ஐந்நூறு ரூபா நோட்டுக்கள் புழக்கத்திலிருந்து நீக்கப்படலாம் என்பது வீண் வதந்தி என்றும் —

அது சம்பந்தமாக மத்திய வங்கியினால் உறுதிப்படுத்தப்பட்ட தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை என்றும் —

இலங்கை வங்கியின் யாழ். மாவட்ட முகாமையாளர் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பொன்றில் அறிவித்துள்ளார்.

இந்த வதந்தியினால் கடந்த சில வாரங்களாக கொடுக்கல், வாங்கல்களில் ஆயிரம் ரூபா, ஐநூறு ரூபா தாள்களின் புழக்கம் அதிகரித்தமையை உணரக்கூடியதாக இருந்ததாகவும் —

வீண் வதந்தியை நம்பாமல் புழக்கத்தில் உள்ள சகல ரூபாத் தாள்களையும் கொடுக்கல், வாங்கலில் பாவிக்கும்படியும் —

குறிப்பாக வணிகப் பெருமக்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் —

அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-உ)

### புத்தளம் சிமெந்து விவகாரம்:

## கூச்சல், குழப்பத்தினால் நாடாளுமன்று ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 21

புத்தளம் சிமெந்து விற்பனை விவகாரத்தில் ஊழல் இடம்பெற்றதாகக் கூறப்படுவது குறித்து நேற்று நாடாளுமன்றத்தில் இரண்டாவது நாளாக விவாதம் நடைபெற்றபோது எதிர்க்கட்சியினர் கூச்சல் போட்டு குழப்பம் விளைவித்ததாகவும்—

நிலைமை கட்டுக் கடங்காமல் போனதால் சபை நடவடிக்கைகளை சபாநாயகர் இன்று வரை ஒத்திவைத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில்—

இந்த விவகாரம் தொடர்பான விவாதத்தை ஐ. தே. கட்சி உறுப்பினரான அனுரா பண்டாரநாயக்கா நேற்று முன்தினம் ஆரம்பித்துவைத்த சமயம், முன்னைய ஐ.தே.க. அரசாங்கத்தைத் தூற்றும் வகையான வாசாகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு சபைக்குள் ஆளும் கட்சியினர் கோசம் எழுப்பினர். (உ-3)

## அதிகாலைப் பொழுதில் தொடரும் ஷெல் வீச்சு

தொண்டமானாறு மேற்குப் பகுதியிலும், வலிகாமம் கிழக்குப் பிரதேசத்திலும் நேற்று அதிகாலை இரண்டு மணியிலிருந்து காலை 6.30 மணி வரை ஷெல் மற்றும் பீரங்கிக் குண்டுச் சத்தங்களும், துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் மாறி மாறிக் கேட்டன.

ஒரே தொடர்ச்சியாகக் கேட்ட இச்சத்தங்களினால் வடமராட்சிப் பகுதி மக்கள் அதிகாலையிலேயே நித்திரையிலிருந்து முழித்துப் பதற்றத்துடன் பொழுதைக் கழித்தனர். குறிப்பாக ஷெல் வீச்சு மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இதேவேளை—

செவ்வாய்க்கிழமை விடிகாலை 5 மணியளவில் ஆனையிறவு முகாமில் இருந்து முகமாலை மடத்தடி மக்கள் குடியிருப்புகளை அண்டிய பகுதிகள் மீது ஷெல் வீச்சு நடத்தப்பட்டது.

இப்பகுதியில் அடுத்தடுத்து ஆறு ஷெல்கள் வந்து வீழ்ந்தன. ஷெல் சிதறல்கள் பட்டு வீடொன்று சேதமடைந்தது.

வீட்டுச் சொந்தக்காரர்கள் திங்களன்று இரவு இடம்பெற்ற பங்குனிப் பொங்கலுக்கு ஆலயத்துக்குச் சென்றிருந்தனர். அதனால் எவரும் பாதிக்கப்படவில்லை. (அ-173-15-117)

## மூதூரில் மோட்டார் சைக்கிளில் வந்த சிப்பாய்கள் மீது புலிகள் தாக்குதல்!

### ஒருவர் பலி; ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓட்டம்

திருகோணமலை மாவட்டம் மூதூர் மூன்றாம் கொலனிப் பகுதியில் நேற்றுக் காலை 10.45 மணியளவில் மோட்டார் சைக்கிள்களில் வந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் சிப்பாய் ஒருவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்; ஏனையோர் காயங்களுடன் தப்பியோடினர்.

மோட்டார் சைக்கிள் ஒன்றைக் கைப்பற்றிய புலிகள் அதனைச் சேதப்படுத்தினர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

இத்தாக்குதலின் போது ஏ. கே. ரகத் துப்பாக்கி — ஒன்று. ஏ. கே. மகஸின்— 1 ஐ. எம். ரவை — 120 ஆகியன புலிகளால் கைப்பற்றப்பட்டன. (உ-7)

## இரண்டு கட்டங்களாக தமிழக சட்டசபைத் தேர்தல்

சென்னை, மார்ச் 21

தமிழக சட்ட சபைக்கான தேர்தல் அடுத்த மாதம் 27 ஆம் திகதியும், மே மாதம் 2 ஆம் திகதியும் இரண்டு கட்டமாக நடைபெறவிருக்கின்றது.

39 நாடாளுமன்றத் தொகுதிகளையும் 234 சட்டப் பேரவைத் தொகுதிகளையும் கொண்ட தமிழகத்தில் 25 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும் அவற்றில் அடங்கிய சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கும் அடுத்த மாதம் 27 ஆம் திகதி வாக்குப் பதிவு நடைபெறும்.

எஞ்சிய 14 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும் அவற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனையாகிறது

1996-97ஆம் ஆண்டுக்கான வாக்கிய பஞ்சாங்கம் விற்பனையாகிறது. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். பூபாலசிங்கம் புத்தகசாலை, இல. 08, நவீன சந்தை மேல்மாடி (உட்புறம்), சாவகச்சேரி.

[சி-2993]

## சனி மாற்றம்

25 - 12 - 96 வரை வியாழ மாற்ற பலன்களும், 18-4-98 வரை சனி மாற்றப் பலன்களும் ரூ. 10/- (நூலாசிரியர் சத்யா) எங்கும் விற்பனையாகின்றது. உதயன் புத்தகசாலை, ஸ்ரீலிங்கா புத்தகசாலை, கிளிநொச்சி.

(40480)

## வாடகைக்கு

பொருள்கள் வாடகைக்கு கொடுக்குமிடம். சில்வர் பீங்கான், ரம்லர், தண்ணீர் ரம்லர், சில்வர்ரே, கறிவாளிகள், செம்புகள், பிளாஸ்ரிக் பாய்கள், பந்திப்பாய், குத்துவிளக்கு, சமையல் பாத்திரங்கள், கிடாரங்கள், ஐஸ்கிறீம் கப்ஸ். வெள்ளை மாளிகை பெரிய அரசடி, சங்கத்தானை.

(41051)

## தவறிவிட்டது

சோமசுந்தரம் வசந்தகுமாரி ஆகிய எனது 738442784V இலக்கமுள்ள தேசிய அடையாள அட்டை மாலு சந்திக்கும் நெல்லியடி சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் கண்ட முகவரியில் ஒப்படைக்கவும். ச. நடராசா, 1ஆம் கட்டையடி (அரவிந் போட்டோ முன்பு), பருத்தித்துறை.

(40631)

## COMPUTER CLASS

பிரத்தியேக கணனி வகுப்புக்கள்: புதிய பிரிவுகள் ஆரம்பம்: (22-03-96 / 23-03-96), 3-30 p.m. (Basic, Pascal, d Base III+, Lotus 123, C++) போதிய செய்முறைப் பயிற்சிகளுடன். தொடர்பு: K. Vignesh, Talent Institute, கோவில் சந்தை, கரவெட்டி.

(41020)

## DISSERTATION

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் பல்கலைக்கழக நடைமுறை விதிகளுக்கு அமைய பயின்ட் செய்து கொடுக்கப்படும், குமார் அச்சகம், சிவன் வீதி, பருத்தித்துறை.

(40358)

---

# வெளிவாரி பட்டப் படிப்புகள்

(யாழ், பேராதனை)

G. A. Q. 95. 96
B. A. Part I
B. A. Final ) யாழ்

விரிவுரைகள் ஆரம்பம் 06 - 04 - 96 (8 மணி)

பேராதனை B. A. புதிய பிரிவு

பேராதனை G. A. Q. 97 புதிய பிரிவு

விரிவுரைகள் ஆரம்பம் 7 - 4 - 96 (8 மணி)

அனுமதிகளை 22 - 4 - 96 இல் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

விவரங்களுக்கு:

S. அருள்நங்கை


## புதிய உயர் கல்லூரி (யாழ்)

(அரசினர் வைத்தியசாலை முன்பாக)
விநாசித்தம்பி லேன், சாவகச்சேரி

(சி/2998)

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 15 — 12 — 1919

மறைவு: 20 — 02 — 1996

காலத்தால் அழியாத கருணைக்கடல்

## அமரர் கனகசபை துரைசிங்கம்

ஐயா, ''பாரினில் நீங்கள் இன்றி படுகின்றோம் துன்பம். நாங்கள் பார்ப்பது எப்போ உங்கள் அன்பை'' எமது தெய்வம் நோயுற்றிருந்த போதும், மரணமான போதும் சகல வழிகளிலும் உதவிய உறவினர்கள், நண்பர்கள், உறவினர் ஆறுமுகம் சாந்தலிங்கம் (கொய்யாத் தோட்டம், ஞானசெல்வவினாயகர் பொருளாளர்) மற்றும் S. L. R. C யாழ்கிளை ஸ்தாபனத்தார் யாபேருக்கும் எமது மனம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

து. சோமசுந்தரம்
து. தனபாலசிங்கம் ] மகன்மார்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தற்காலிக விலாசம்:
க. பரமசாமி,
கரவெட்டி.

36/3, பழையபூங்கா வீதி,
சுண்டுக்குழி,
யாழ்ப்பாணம்.

(41173)

---

# புகைப்படங்கள்

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி வணிக விழா, பெற்றோர் தின விழா, பரியோவான் கல்லூரி பெற்றோர் தின விழாப் படங்களுக்கு 31-3-96 வரை தொடர்பு கொள்ளவும்.

N. சற்குணலிங்கன்,
ஸ்ரேசன் லேன், சாவகச்சேரி.
(கானான் ஜெப ஆலயத்திற்கு அருகில்)

[41179]

---

# உடன் வருகை தரவும்

விடத்தற்பளை, மிருசுவிலில் வசிக்கும் விக்கி மாஸ்டர் என்பவரை 49/1, கணேசபுரம், கிளிநொச்சியில் வசிக்கும் ராஜ்குமார் என்பவர் அவசரமாகத் தேடுகிறார்.

(40481)

---

# பணிநிலை வெற்றிடங்கள்

விரைவில் மாங்குளம் பகுதியில் செயற்படவிருக்கும் தனியார் மருத்துவமனைக்கு கீழே குறிப்பிடப்படும் பணிநிலைகளுக்குத் தகுதியானவர்கள் வேண்டப்படுகின்றனர்.

விண்ணப்பிக்க விரும்புவோர் 23-03-1996 சனி, 24-03-1996 ஞாயிறு ஆகிய நாட்களில் காலை 10 மணி முதல் 12 மணி வரை சாவகச்சேரி மருத்துவமனை நோயாளர் நலன்புரிச் சங்கத்திற்கு உரிய ஆவணங்கள், சான்றிதழ்களுடன் நேரில் சமுகந்தரவும்.

**பணிநிலைகள்**

- ★ மருத்துவர் — (M.B.B.S.) or (R.M.P.)
- ★ பல் மருத்துவர் — (Dental Surgeon)
- ★ பல் தொழில் நுட்பவியலாளர் — (Dental Technician)
- ★ தாதிகள் — (Nurses)
- ★ சத்திரசிகிச்சைக் கூட தாதியர் — (O.T. Nurses)
- ★ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர் — (M.L.T.)
- ★ மருத்துவ மாது — (Midwife)

★ அனுபவமுடையவர்கள் விரும்பத்தக்கது.
(ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

நோயாளர் நலன்புரிச் சங்கம்
சாவகச்சேரி

(41069)

---

# பணிநிலை வெற்றிடங்கள்

கீழ்க் காணும் பணிநிலைகளிற்கான வேண்டுகைகள் தகைமை வாய்ந்தவர்களிடமிருந்து வேண்டப்படுகின்றன.

**கணக்காய்வாளர்கள்**

தகைமை:-

1. தொழில் நுட்பக் கல்லூரி உயர் தேசிய கணக்கியல் தகைமைச் சான்றிதழ் (H. N. D. A.) தேர்வில் தேர்ச்சி.

அல்லது

2. க.பொ.த. (உயர்தரம்) வணிகம் தேர்ச்சியுடன் கணக்காய்வுப் பணியில் 3 ஆண்டுகள் பட்டறிவு (அனுபவம்)

அல்லது

3. க. பொ. த. (சாதாரணம்) கணிதம் உட்பட தேர்ச்சியுடன் கணக்காய்வுப் பணியில் 10 ஆண்டுகள் பட்டறிவு.

**கணக்குப் பதிவாளர்கள்.**

தகைமை:-

1. தொழில்நுட்பக் கல்லூரி கணக்கியல் தேசிய தகைமைச் சான்றிதழ் (N. C. A.) தேர்வில் தேர்ச்சி.

அல்லது

2. க. பொ. த. (உயர்தரம்) வணிகர் தேர்ச்சி கணக்குப் பதிவாளர் பணியில் பட்டறிவுள்ளவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**மேலாளர்கள் (முகாமையாளர்கள்)**

தகைமை:-

1. க.பொ.த. (உயர்தரம்) வணிகம் தேர்ச்சியுடன் பல்பொருள் வாணிபத்தில் மேலாளர்களாக 3 ஆண்டுகள் பட்டறிவு உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

அகவை (வயது) எல்லை — 21 தொடக்கம் 45 வரை

வேண்டுகை அனுப்ப வேண்டிய முடிவு நாள்:- 05 - 04 - 1996

வேண்டுகைகள் அனுப்பும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் ''பணிநிலையினை'' குறிப்பிடுக.

அனுப்ப வேண்டிய முகவரி:
நிதி (405)
மே/பா ஈழநாதம்,
[illegible]
சாவகச்சேரி.

(41177)

---

# SPOKEN ENGLISH WITH GRAMMAR

## HARY'S INSTITUTE

(Kondavil)
Syamala Mill Lane, Meesalai.

Lectures by:
Mr. **M.A. HARI** (B.A. Dip. in Eng.)

★ புதிய பிரிவு ஆரம்பம்:
**03 - 04 - 1996** 3-00 p.m.

★ ஏற்கனவே எம்மிடம் கல்வி கற்ற மாணவர்கள் எம்மிடம் உடன் தொடர்பு கொள்ளவும்.

★ பல்கலைக்கழக அனுமதி பெற்று செல்லும் மாணவர்களுக்கு விசேட பிரிவு ஒன்று ஆரம்பமாகவுள்ளது.

மு.குறிப்பு: சகல மாணவர்களும் தங்களுக்குரிய அனுமதிகளை 22-03-1996 காலை 9-00 மணி தொடக்கம் பெற்றுக்கொள்ளவும்.

(41176) DIRECTOR

---

# கலை, வர்த்தகக் கல்லூரி

## C. C. A.

## 96, 97 A/L

(சாவகச்சேரி இந்துக்கல்லூரி முன்பாக)

★ எமது வழமையான ஆசிரியர் குழு

ஆரம்பம் 01 - 04 - 96
பி. ப. 3-00 மணி

— நிர்வாகி

(41070)

---

## தமிழீழத்தின் ஒரே தந்திச்சேவை
## யாழ் - வன்னி தொடர்புச் சேவை

உங்கள் செய்திகளை காற்றினும் கடுகதியில் உரியவர்களிடம் சேர்ப்பதற்கு காத்திருக்கிறது. உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்.

**குடாநாட்டில்**

★ சாவகச்சேரியில்:
தேவாலய வீதி,
சாவகச்சேரி

**வன்னியில்**

★ கிளிநொச்சியில்:
பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அருகில்,
கண்டி வீதி,
கிளிநொச்சி

★ ஓமந்தையில்:
சோதனை நிலையம்,
ஓமந்தை

(ஈ/003)

---

யாழ். நகரில் புகழ் பூத்த முன்னணி நிறுவனமான

# புதிய பேரடெனியா இன்ஸ்ரிரியூட்

தற்போது வடமராட்சியில்
(வடமராட்சி மகளிர் கல்லூரி முன்பாக)

## BEACON STUDY CENTRE

வதிரி, கரவெட்டி.

என்ற கல்வி நிலையத்தில் 03 - 04 - 1996 இல் ஆரம்பமாகிறது உங்கள் அனுமதிக்கான பதிவுகளை 23-03-1996 காலை 8-00 மணி முதல் பதிவு செய்யுங்கள்.

ஆண்டு 6 தொடங்கி ஆண்டு 11 வரை வகுப்புகள் நடைபெற இருக்கின்றன.

ஆசிரியர் குழு

1. கணிதம் — திரு. இரா. அருட்செல்வம்
2. விஞ்ஞானம் — திரு. இரா. செல்வவடிவேல்
3. சமூகக்கல்வி — திரு. ஐ. புவனேந்திரன்
4. ஆங்கிலம் — திரு. எஸ். சந்திரமௌலி
5. தமிழ்
6. சமயம் ) — திரு. ஞான திருக்கேதீஸ்வரன்
7. வர்த்தகம் — திரு. குமார்

- நிர்வாகி -

(41181)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்கள உத்தியோகத்தரான
செல்வி கௌரிதேவி கந்தஞானி
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி மகேஸ்வரி கந்தஞானி

அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றோம்.

உதவி ஆணையாளரும், உத்தியோகத்தர்களும்
கமநல சேவைகள் திணைக்களம், யாழ். மாவட்டம்.

(41183)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பிரசாரம் பிரதானம்

ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதையும், இராணுவ உதவிகள் வழங்குவதையும் நிறுத்துமாறு யாழ்ப்பாணம் பிரசைகள் குழு இஸ்ரேலிய அரசிடம் கேட்டுள்ளது.

அந்த நாட்டுப் பிரதமர் ஷிமோன் பெரஸுக்கு அனுப்பிய மகஜரில் ஸ்ரீலங்கா அரசின் கொடுமைகளையும், தமிழரை அடிமைப்படுத்தி மேலாண்மை செலுத்துவதையும், தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் பின்னணியையும் பிரசைகள் குழுவினர் விவரமாகவும், விளக்கமாகவும் தெளிவுபடுத்தி உள்ளனர்.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு பயங்கரவாதம் என்று பெயரிட்டு, உலக நாடுகளை அதனை நம்பச் செய்து, தமிழர்களைக் கொன்றொழிப்பதற்காக ஆயுத உதவி, இராணுவ தொழில்நுட்ப உதவி, நிதி உதவி என்பனவற்றை ஸ்ரீலங்கா அரசு அவற்றிடமிருந்து தாராளமாகப்பெற்று வருகிறது.

ஸ்ரீலங்கா ஒரு நாடு, அரசு என்ற வகையில், வெளிநாடுகள் அதனுடன் கொண்டுள்ள ராஜீக மற்றும் வர்த்தகத் தொடர்புகள் காரணமாக, சர்வதேச நாடுகள், அது சொல்வதை கேட்டுக் கேள்வி இன்றி நம்பிவிடுகின்றன.

அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தமிழர்கள் மீதான சிங்களவர் மேலாதிக்கத்தை நிலை நிறுத்துவதற்கான சகல விதமான கொடுமைகளையும் சிங்கள அரசுகள் புரிந்தன.

தமிழர்களை அடிமைப்படுத்தி, அவர்களது ஆட்சி உரிமையைத் தட்டிப் பறித்து என்றென்றும் இரண்டாந்தரப் பிரசைகளாக வைத்திருக்க வேண்டும் அல்லது அவர்களை பூண்டோடு அழித்து இதனை ஒரு தனிச் சிங்கள நாடாக்க வேண்டும் என்ற இலக்குடனேயே இப்போதைய அரசும் செயற்படுகிறது.

இந்த உண்மை வெளிநாடுகள் பலவற்றுக்குத் தெரியாது. அதனை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் அவற்றுக்கு மிகக் குறைவு. தாங்கள் ஒரு நாட்டின் அரசாங்கம், ஸ்ரீலங்காவும் ஓர் அரசாங்கம் என்பதால் அது சொல்வதையே கணக்கில் எடுத்துக் கருமமாற்றுகின்றன.

இந்த நிலையை மாற்றி ஸ்ரீலங்கா அரசின்— சிங்களவர்களின்— உண்மையான இலக்கும் தமிழர்களின் போராட்டத்தின் இலக்கும் வெளிநாடுகளுக்கு உணர்த்தப்பட வேண்டும்.

அரசாங்கத்தின் பொய்ப் பிரசாரத்தையும் மூடு மந்திரத்தையும் அம்பலப்படுத்தி, தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் தாற்பரியத்தை சர்வதேச அரசுகளுக்கு தொடர்ந்து தெளிவுபடுத்தி, உண்மையைப் பிரசாரம் செய்து கொண்டிருக்க வேண்டும்.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கு இதில் பெரும் பங்குண்டு. உலக நாடுகளின் அரசியல் தலைவர்களுடனும், அமைப்புகளுடனும் நேரடித் தொடர்பு வைத்து உண்மைகளை விளங்க வைத்து அவற்றின் மீது செல்வாக்குச் செலுத்துமளவுக்குச் செயற்பட வேண்டும்.

உள்நாட்டிலிருந்தும் உண்மையைச் சொல்லும் காத்திரமான, கனதியான பிரசாரமும் அவசியம். பிரசைகள் குழு போன்ற மக்கள் அமைப்புகள் இதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். இவ் வழியில் தொடர்ச்சியாகச் செயற்பட வேண்டும்.

# அரச அதிபர் உட்பட 41 பேர் மட்டுமே யாழ். செயலகத்தில் கடமையாற்றுவர்

## ஏனையோர் உ. அ. அதிபர் அலுவலகங்களுக்கு மாற்றம்

சாவகச்சேரி, மார்ச் 21

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கும் யாழ். செயலகத்தில் 41 மத்திய அரசு ஊழியர்கள் மட்டுமே இனிப் பணிபுரிவார்கள்

அரச அதிபருடன் சேர்ந்து சகல தரப்பு ஊழியர்களுமாக 41 பேரைத் தவிர, ஏனையோர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கு மாற்றப்பட்டு வருகின்றனர்.

பரவலாக்கல் திட்டத்தின் கீழ் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கு பரவலாக்கப்பட்ட ஓய்வூதியப்பிரிவு, தேர்தல் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களம், பதிவாளர் திணைக்களம் ஆகியன தொடர்ந்தும் செயலகத்திலேயே இயங்கும்.

அதேவேளை — மாகாண சேவையில் உள்ளவர்கள் சகலரையும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்துக்கு மாற்று மாறும் —

அவர்களைக் கொண்டு மத்திய அரசின் பணிகளை மேற்கொள்ளவேண்டாம் என்றும்—

தொடர்ந்து அவர்கள் பணியாற்றினாலும் அவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது என்றும் — மாகாண அரச சேவை ஆணைக்குழு சகல அரச அதிபர்களுக்கும் சுற்று நிருபம் ஒன்றை அனுப்பியுள்ளது. (இ-3)

## முறைசாரா கற்கைநெறி எழுத்துப் பரீட்சை

கிளிநொச்சி, மார்ச் 21

கிளிநொச்சி மாவட்ட கல்வித் திணைக்களத்தினால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட முறைசாராக் கற்கை நெறிகளை மேற்கொண்டோருக்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

ஏற்கனவே நடைபெற்ற செய்முறைப் பரீட்சைகளுக்குத் தோற்றியோர் அனைவரையும் இந்த எழுத்துப் பரீட்சைக்கு தோற்றுமாறு கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் கேட்டுள்ளார். (இ-3)

# ஆவணங்களை எடுத்து வர அமைச்சு செயலர் அனுமதி

கோண்டாவிலில் உள்ள வடபிராந்திய போக்குவரத்து சபை ஊழியர்களின் ஆவணங்களை எடுத்துவர போக்குவரத்து அமைச்சு செயலாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

கோண்டாவிலில் உள்ள அலுவலகத்தில் போக்குவரத்துச் சபையின் 850 ஊழியர்களின் சேமலாப நிதி, சுய விவரக் கோவை ஆகியவற்றை எடுத்து வராததால் அந்த ஊழியர்கள் தமது சேமலாப நிதி உட்பட பல வசதிகளைப் பெறமுடியாத நிலையில் உள்ளனர்.

இது குறித்து பேச்சு நடாத்தியதன் பயனாக கோண்டாவிலுக்கு சென்று அந்த ஆவணங்களை எடுத்துவர அனுமதி கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# யாழ். பல்கலைக்கு நிதி ஒதுக்கீடு இல்லை!

சாவகச்சேரி, மார்ச் 21

யாழ். பல்கலைக் கழகத்துக்கு கட்டடங்கள் திருத்தவும், உபகரணங்கள், தளபாடங்கள் கொள்வனவு செய்யவும் மூலதன நிதி வழங்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மறுப்பு தெரிவித்து வருகிறது.

கடந்த ஒக்ரோபர் மாதத்துக்கு பின்னர் இந்த வகையான வேலைகளுக்கு நிதி வழங்கப்படவில்லை என்றும்-

இக் காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்கான செலவுத் தொகையை பெறமுடியாதுள்ளதாகவும்— பல்கலைக்கழக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதேவேளை — சம்பளம், மேலதிக கொடுப்பனவு போன்ற செலவீனங்களுக்காக நிதி வழங்கப்படுவதாகவும் — எனினும் போதிய தொகை வழங்கப்படுவதில்லை என்றும் — அவர் மேலும் தெரிவித்தார்.

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

கிளிநொச்சி மாவட்ட கல்வித் திணைக்களத்தினால் 94 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட முறைசாராக் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்தோருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் அடுத்த மாதம் 6 ஆம் திகதி கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்று கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் அறிவித்துள்ளார். (இ-3

## வட பிராந்திய போக்குவரத்து ஊழியரின் 2 மாத சம்பளம் கிடைக்கும்

வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு செப்ரெம்பர், ஒக்டோபர் மாதங்களுக்கான சம்பளத்தை வழங்க போக்குவரத்து அமைச்சுச் செயலாளர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்துச் சபை நலன்புரிச் சங்க தூதுக்குழு ஒன்று அமைச்சுச் செயலாளருடன் கொழும்பில் பேச்சு நடத்தியது.

அப்போதே இருமாத சம்பளம் வழங்க இணக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் இந்த இரு மாதங்கள் தவிர்ந்த ஏனைய நான்கு மாதங்களுக்குரிய சம்பளம் வலிகாமத்தில் வைத்தே வழங்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சு செயலாளர் தூதுக் குழுவிடம் தெரிவித்தாராம்.

## திருமறை கலா மன்றத்தின் கல்வாரி சுவடுகள்

சாவகச்சேரி, மார்ச் 21

தவக்காலத்தையொட்டி திருமறைக் கலாமன்றம் வழங்கும் கல்வாரிச்சுவடுகள் பக்தி இசை, உரை, நாடகம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மிருசுவில் பயஸ் விளையாட்டு மைதானத்திலும்—

எதிர்வரும் 31 ஆம் திகதி பருத்தித்துறை கலட்டி றோ. க. வித்தியாலய மைதானத்திலும் இரவு 7 மணிக்கு நடைபெறவிருக்கிறது. (இ-3)

# வடக்கில் தாக்குதலை ஆரம்பித்தால் கிழக்கில் படை பலம் குன்றிவிடும்

## பாதுகாப்பு வட்டாரங்கள் கருத்து

கொழும்பு, மார்ச் 21

வடக்கில் இரண்டாவது பெரிய இராணுவத் தாக்குதலை நடத்தினால் கிழக்கில் படைப்பலம் குன்றிப் போகும் என்று பாதுகாப்பு வட்டாரங்களில் கருத்து நிலவுகிறது.

ஏப்ரல் மாதத்துக்கு முன்னர் 'சூரியப்பிரகாசம்' போன்ற மிகப் பெரிய அளவிலான இராணுவ நடவடிக்கையை வடக்கில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

பயிற்சி பெற்ற சிப்பாய்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதால் வடக்கின் மீதான உத்தேச தாக்குதலுக்கு, கிழக்கிலிருந்தே துருப்புக்களை நகர்த்த வேண்டிய கட்டாய நிலை தோன்றியுள்ளது.

அவ்வாறு செய்யும் பட்சத்தில் கிழக்கில் படையினரின் பலம் குன்றிப்போய் விடும் என்று அங்கு உள்ள களநிலை அதிகாரிகள் கவலை தெரிவித்திருப்பதாகவும் —

இத்தகைய ஒரு நிலைமையை எவ்வாறுசமாளிப்பது என்பது குறித்து பாதுகாப்பு உயர் அதிகாரிகள் தீவிரமாக ஆலோசனைகள் நடத்தி வருவதாகவும்—

கிழக்கில் இருந்து துருப்புக்கள் வடக்கே நகர்த்தப்பட்டால் கிழக்கில் பாதுகாப்பு வெற்றிட நிலை தோன்றும் என அவதானிகள் சுட்டிக் காட்டி உள்ளதாகவும் — 'சண்டேலீடர்' பத்திரிகையின் பாதுகாப்புச் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## நாகதம்பிரான் பங்குனிப் பொங்கல்

சரித்திரப் பிரசித்தி பெற்ற கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் ஏப்ரல் இரண்டாம் திகதி நடைபெறவுள்ளது.

அன்று செவ்வாய்க்கிழமை பகலும், இரவும் மறுநாள் காலையும் பங்குனி உத்தரப் பொங்கல் நடைபெறும்.

பொங்கல் விழாவையொட்டி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (26ஆம் திகதி) விளக்கு வைக்கும் வைபவம் ஆரம்பமாகும். தொடர்ந்து விசேட பூசைகள், அன்னதானம், அடியார்களின் நேர்த்தி ஆகியன இடம் பெறும்.

அடியார்களின் நலன் கருதி விசேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும், பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

இம்முறை வழமையை விட பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் பொங்கல் விழாவில் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. [அ-173]

# வடபகுதிப் பயணிகள் வருகையால் வவுனியா நகரம் களைகட்டுகிறது

## எனினும் படையினர் கெடுபிடிகள் நீடிப்பு

கிளிநொச்சி, மார்ச் 21

கொழும்பில் நிலவும் தமிழர் மீதான இராணுவ கெடுபிடிகள் காரணமாகவும் —

வடபகுதி பயணிகள் கொழும்பு செல்ல வவுனியாவில் ''பாஸ்'' வழங்குவதில் நிலவும் கடுமையான நடைமுறைகளாலும் — வவுனியா நகரப் பகுதி வடபகுதி தமிழர்களால் நிறைந்து வழிகின்றது.

ஏராளமான தங்கு விடுதிகள் [லொட்ஜ்] புதிது புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றன. நகர் எங்கும் தனியார் தொலைத் தொடர்பு நிறுவனங்கள் திறக்கப்படுகின்றன. சாப்பாட்டு கடைகளின் தொகை திடீரென அதிகரித்துள்ளது. ரீயூட்டறிகளும் அதிகரித்துள்ளன. வவுனியா அரசினர் மருத்துவமனையிலும், தனியார் மருத்துவ மனைகளிலும் நோயாளர் வருகை அதிகரித்துள்ளது.

இதேவேளை வவுனியாவில் வீடுகள், அறைகள் வாடகைக்கு கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது; பெரும்தொகையான முற்பணமும், வாடகையும் அறவிடப்படுகின்றன.

கொழும்புப் பாணியில் குடியிருக்க வருபவர்களிடம் வாடகை முற்பணம் பெற்று அந்த பணத்தில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன.

இதேவேளை வவுனியாவில் பொலிஸ் 'பாஸ்' கெடுபிடிகள் தொடர்கின்றன; வவுனியா செல்பவர்களுக்கும் 24 மணி நேர 'பாஸ்' மட்டுமே வழங்கப்படுகின்றது. அதற்குள் அவர்கள் திரும்ப வேண்டும்.

தொடர்ந்து அங்கு தங்குவதாயின் வவுனியாவில் நிரந்தர குடியிருப்பாளரின் கடிதத்துடன் கிராம சேவையாளரின் உறுதிப்படுத்தலுடன் பொலிஸ் நிலையத்துக்கு விண்ணப்பித்து 7 நாள் 'பாஸ்' பெற வேண்டும். இதுவும் அவ்வப்போது புதுப்பிக்கப்படவேண்டும்.

இதேவேளை தற்போதைய வரட்சி காரணமாக வவுனியா எங்கும் தண்ணீர் தட்டுப்பாடு நிலவுகின்றது. (இ-76)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு இரத்தினம் J.P.

ஏழாலை மேற்கைச் சேர்ந்த முருகேசு இரத்தினம் (சமாதான நீதிவான்) 17- 3- 96 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் அரியமலரின் அன்புக் கணவரும், இராஜேஸ்வரன் (புலிகளின் குரல்), அழகேஸ்வரி, வரதராசன் (கனடா), கமலேஸ்வரி, பாஸ்கரன், பிரபாகரன் (கனடா), விஜயகுமார் (கனடா), இந்திரகுமார் (ஜேர்மனி), ஜெயக்குமார் (கனடா), புஸ்பராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவநிதி, இலட்சுமிகாந்தன் (உரிமையாளர், இலட்சுமி ஸ்ரோர்ஸ், ஏழாலை), சந்திரமதி (கனடா), இராசேந்திரம் (மக்கள் வங்கி சுன்னாகம்), சூரியகலா, ராஜினி (கனடா), சிவமலர் (கனடா), இந்துமதி (ஜேர்மனி), நிமலஜோதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரமணன், தீபன், ஷகிலா, மோகன சொரூபன், காந்தசொரூபி, ஆகீசன், கஜந்தன் (கனடா), ஜெகன், ஜெனகன், கோகுலன், தாட்சாயினி, யசோதரா, கிஷான் (கனடா), ஜெனிசன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா, கனகம்மா, சிவநேசம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாக்கியம், இராசதுரை, காலஞ்சென்ற கனகரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்,

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (21- 3- 96) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு பருத்தித்துறையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. இராஜேஸ்வரன்
(மகன்)

முகவரி:
திருமதி. அ. இரத்தினம்
மே/பா. கோ. சங்கரப்பிள்ளை,
'மணி இல்லம்',
வாணர் குடியிருப்பு.
புலோலி தென்மேற்கு,
பருத்தித்துறை.

(41178)

## இளையதம்பி கனகரத்தினம்
### (அப்புத்துரை)
### (இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது கைதடி தெற்கு கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட இ. கனகரத்தினம் 18-3-96 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவம், சிவகுமார் (வைத்திய கலாநிதி— போதனாவைத்திய சாலை, கொழும்பு), சிவச்சந்திரன் (U.K.) ஆகியோரின் அருமைத் தந்தையும், நீலவேணியின் அன்பு மாமனாரும், நிராகாவின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பி. ப. 2 மணிக்கு கைதடி இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. சிவம்

கைதடி தெற்கு,
கைதடி.

(C/4128)

## மயில்வாகனம் தம்பிப்பிள்ளை
### (இளைப்பாறிய ஆசிரியர்)

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் மயில்வாகனம் தம்பிப்பிள்ளை காலமானார்.

இவர் திருமதி பாக்கியத்தின் அன்புக் கணவரும், தெய்வேந்திரராணி, இராஜதுரை (பிரான்ஸ்), செல்வநாயகம், தேவராஜா (ஜேர்மனி), சிவராஜா (ஜேர்மனி), அமிர்தாம்பிகை (ஜேர்மனி), யோகராஜா (ஜேர்மனி), பாக்கியலெட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், வே. சுந்தரலிங்கம், உருத்திரசீலி, புஷ்பராணி, ஸ்ரீதேவி, சிவசுப்பிரமணியம், நிமால்குமார் ஆகியோரின் மாமனாரும், சுபாஷினி, சுபாஸ்கரன், ஜீவாகரன், வஜீகரன், பிஜந்தா, லிகந்தா, ரஜீவ்காந்தன், மயூரனி, பிரியா, நிஷாந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும், தம்பிப்பிள்ளை, செல்லத்தம்பி, தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21 - 3 - 96) வியாழக்கிழமை 12.00 மணியளவில் உடுப்பிட்டி வல்லை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. செல்வநாயகம்
(மகன்)

தற்காலிக முகவரி:
C/o கோ. நிமால்குமார்.
சந்தை வீதி,
உடுப்பிட்டி.

(41180)

## கூட்டம்

சாவகச்சேரி கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் வலயம் ஒன்றின் பணிப்பாளர் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

ஆண்டு ஒன்று முதல் 5 வரையான மாணவர் தொகை, ஜி. சீ. ஈ. (உயர்தர) வகுப்பு மாணவர் தொகை, வலயம் ஒன்று, வலயம் இரண்டு ஆகியவற்றின் இடம்பெயர்ந்த மாணவர் விவரம், நிரந்தரப் பாடசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவர் விவரம் ஆகியவற்றை அதிபர்கள் இக்கூட்டத்துக்கு வரும்போது கொண்டுவருமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

## இரண்டு கட்ட...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றுக்கு உட்பட்ட சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் மே மாதம் 2 ஆம் திகதி வாக்குப் பதிவு நடைபெறும்.

4 கோடிக்கும் அதிக வாக்காளர்களைக் கொண்ட தமிழகத்தில் தேர்தல் அறிவிப்பை ஆளுநர் சென்னா ரெட்டி அடுத்த புதன்கிழமை வெளியிடுவார். அன்று முதல் வேட்புமனு ஏற்கப்படும். (இ-3)

## ஜாவத்தை...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தைக் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

நாட்டின் தற்போதைய நிலையைக் கருதி, களுத்துறை நகரப் பகுதிகளின் பாதுகாப்புகளைப் பலப்படுத்துமாறும் அவர் பொலீஸாரிடம் கேட்டுக் கொண்டார்.

அண்மையில், களுத்துறை வடக்கு, கலிடோ கடற்கரைக்கு அப்பால் இரண்டு இழுவைப் படகுகள் நின்றதைக் கண்டு களுத்துறை மக்கள் பதற்றமடைந்தது குறித்தும் திலக் கருணாரத்னா பிரஸ்தாபித்தார்.

அந்த இழுவைப் படகுகள் இரண்டும் பேருவளைக்குத் திருத்த வேலைகளுக்காக எடுத்துச் செல்லப்பட்ட வேளை மண்பிட்டியில் கரை தட்டியதாலேயே அவை அங்கு தரித்ததாக களுத்துறை பொலீஸ் அதிபர் எஸ். சீவரத்தினம் கூட்டத்தில் தெரிவித்தார். இக்கூட்டத்துக்கு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா தலைமை வகித்தார். (அ)

## அரலித்துறை...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திருந்த அவர்கள் அங்கிருந்த ஆயுத தளபாடங்களைக் கைப்பற்றி தம்முடன் கொண்டு சென்றனர்.

இத்தாக்குதலில் எட்டுப் படையினர் உயிரிழந்ததை ஒப்புக்கொண்டுள்ள ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் காயமடைந்த ஐந்து சிப்பாய்கள் பலாலி இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-ரி-3-6-7)

## பொருள்களை....
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பணியில் 'லங்கா கல்யாணி', 'லங்கா முடித' ஆகிய கப்பல்களும், மண்எண்ணெய் ஏற்றி வரும் பணியில் ''மாஹோ'' கப்பலும் ஈடுபட்டு வருவது தெரிந்ததே. (உ-3)


# லயன்ஸ் கழகம் வடமராட்சி

## இலவச கண் சிகிச்சை முகாம்

இடம்; அம்பன் அரசினர் மருத்துவமனை
(வடமராட்சி கிழக்கு)

காலம்: 24 - 03 - 96 ஞாயிற்றுக்கிழமை
காலை 8 மணி

கண் பரிசோதனை செய்ய விரும்புபவர்களும், ''கற்றாக்'' சத்திர சிகிச்சை செய்ய விரும்பும் 50 வயதிற்கு மேற்பட்டோரும் தங்கள் பகுதி கிராம சேவையாளரிடம் தொடர்பு கொள்ளவும்.

(40365)


# மரண அறிவித்தல்கள்

### திருமதி
## வேதநாயகம் தியாகராசா

கைதடி கிழக்கைச் சேர்ந்த வேதநாயகம் தியாகராசா நேற்று (20-03-1996) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை தியாகராசா அவர்களின் அன்பு மனைவியும், இராசகுலவீரசிங்கம் (கணக்காளர், மாகாணசபை, திருமலை), திருமதி பராசக்தி இராசையா, திசைவீரசிங்கம் (லண்டன்), திருமதி அழகராணி இரஞ்சன் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும் —

காலஞ்சென்ற வி.ச. இராசையா (தபால் அதிபர்), காலஞ்சென்ற சிவஞானேஸ்வரி, இராஜேஸ்வரி (ஆசிரியை திருமலை), கமலேஸ்வரி, இரஞ்சன் ஆகியோரின் மாமியும், சுகந்தி, முகுந்தன், ரமேஷ், உதேஷ், சருசன், சயிதன், பிரிஷான, சஞ்சிகா, செந்தூரன், ரஜிதா, சஞ்சுதா, சுமங்கலி ஆகியோரின் பேர்த்தியும், வத்ஸலனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 21-3-96 பிற்பகல் 1 மணிக்கு ''பராசக்தி வாசா'' இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வை. குணாளன்

''பராசக்தி வாசா'',
கைதடி கிழக்கு,
கைதடி.

(41186)

## ஈஸ்வரலிங்கம் சிவநந்தினி

சங்கானை கிழக்கு நிற்சாமத்தைப்பிறப்பிடமாகக் கொண்ட ஈஸ்வரலிங்கம் சிவநந்தினி நேற்று (20-03-96) காலமானார்.

அன்னார் ஈஸ்வரலிங்கத்தின் அன்பு மனைவியும், பெ. சின்னத்துரை தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வியும், ஆசை — மாணிக்கம் தம்பதிகளின் மருமகளும், கனிஸ்காவின் பாசமிகு தாயுமாவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் மட்டுவில் கிழக்கு மோகனதாஸ் வீதியிலுள்ள இல்லத்தில் இன்று நண்பகல் 12-00 மணியளவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வெ. கு. ஜெகதீசன்
(ஆசிரியர்)

மோகனதாஸ் வீதி,
மட்டுவில் கிழக்கு,
மட்டுவில்.

(41185)

## பொன்னம்மா இராசையா

குப்பிளான் கேணியடியைப் பிறப்பிடமாகவும், கரணவாய் கிழக்கு, உச்சி அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகக் கொண்டிருந்த இ. பொன்னம்மா நேற்று (20-03-96) மாலை 4-30 மணியளவில் காலமானார்.

அன்னார் இளையதம்பி இராசையாவின் (மின்சார சபை ஊழியர்) அன்பு மனைவியும், தங்கராணி, கலாராணி, மகேந்திரவேல், தணிகைவேல் ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்கவடிவேல், விஜயரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியாரும், கபில்ராஜ், அஸ்வினி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-3-96) காலை 10-00 மணியளவில் அவரது கரவெட்டி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரணவாய் கிழக்கு கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. இராசையா
(கணவர்)

கரணவாய் கிழக்கு,
உச்சி அம்மன் கோவிலடி,
கரவெட்டி.

(41184)


## வெகுவிரைவில் எதிர்பாருங்கள்...

திரைப்படப் பிரிவின் தயாரிப்பில் நிதர்சனமும்,
விடுதலைப்புலிகள், கலை பண்பாட்டுக் கழகமும்
இணைந்து வழங்கும்

# 'பிஞ்சு மனம்'

ந. கேசவராஜனின் **"திசைகள் வெளிக்கும்"** (முழுநீள வண்ணப்படம்)

(சி/4119)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் [illegible] சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிக பணிமனையில் 21-03-96 இல் அச்சிட்டு வெளியி[illegible].

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org